# கற்றுக் கொள்வதில் புதிய வழிமுறை!



முதலாமாண்டு இளநிலை சமூகப்பணி மாணவர்களும், உளவியல் மாணவர்களும் தங்கள் பாடத்தில் இடம் பெற்றுள்ள செம்மொழித் தகுதிக்கான நாற்பத்தியொன்று நூல்கள் பட்டியலில் காணப்படும் ‘முத்தொள்ளாயிரம்’ குறித்த கண்காட்சியை மொழிக்கூடத்தில் 04.03.2019 திங்களன்று வைத்துப் பேராசிரியர்களை அசத்தினர். தமிழ் மண்ணை ஆண்ட மூவேந்தர்களின் பெருமைகளைப் பேசும் நூலிலிருந்து பாடத்தில் உள்ள ஒன்பது பாடல்களைப் படங்களுடன் கூடிய கட்டுரையாகத் தயாரித்து மூத்த மாணவர்களுக்கு அவர்கள் கேட்ட சந்தேகத்திற்குச் சிறப்பாக விளக்கம் அளித்தனர். மாணவர்களின் பிற துறைப் பேராசிரியர்களும் நூலின் பெருமையை நன்கு உணர்ந்து மாணவர்களை வாழ்த்தி விடை பெற்றனர்.



